ஆண்டறிக்கை மற்றும்
வருடாந்த நிதிக் கூற்றுக்கள்
2021


மனிதவள மேம்பாட்டு நிறுவகம்

கொழும்புப் பல்கலைக்கழகம்



நோக்கக் கூற்று

"உலகளாவிய சூழலில் முற்போக்கான சமூகத்தின் அபிவிருத்தியின் நிமித்தம் மனித வளத்தினை மேம்படுத்துவதற்கு கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுக்கான மிகச் சிறந்த நிலையமாகப் பரிணமித்தல்"



பணிக் கூற்று

"தலைமைத்துவம், தொழில் முயற்சிகள் மற்றும் விமர்சன ரீதியிலான சிந்தனைத் திறனை விருத்தி செய்வதன் மீது கவனத்தைச் செலுத்தி உயர் சமூக மற்றும் ஒழுக்க நெறிமுறைகளுடான அர்ப்பணிப்புடன் அலுவல் மேற்கொள்ளும் பணியாட்தொகுதி மற்றும் அதி நவீன தொழில்நுட்பம் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி செயற்பாடுகளின் ஊடாக முகாமைத்-துவம், முகாமைத்துவம் சாராத ஊழியர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு கற்றல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக தேசிய ரீதியில் போட்டித் தன்மை மற்றும் சர்வதேச அங்கீகாரத்திற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல்"

விழுமியங்கள்



விழுமியம் 01 - கல்விக்கான சுதந்திரம்
தனது முறையான உயர்கல்வி நடவடிக்கைகள் இடைநடுவில் தடைப்பட்ட முகாமையாளர்கள் அல்லாத ஊழியர்களின் இலவசக் கல்விக்கான வாய்ப்பை தொடர்ந்து ஏற்படுத்திக்கொடுப்பதுடன், உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாதுபோன முகாமைத்துவ ஊழியர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களை விருத்தி செய்வதனை நாம் பாராட்டுகின்றோம்.

விழுமியம் 02 - முற்போக்குச் சிந்தனை
ஒவ்வொருவருடைய கடமைகளையும் உயர் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு எமது கூட்டு முயற்சியின் பெறுபேறுகளை நியாயமான முறையில் பகிர்ந்துகொண்டவாறு மற்றும் நாம் பெற்றுக்கொண்டவற்றை மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தினுள் மற்றும் அதற்கு வெளியில் எதிர்கால சந்ததிக்காக நிலைபேறான வகையில் பேணியவாறு மற்றும் முன்னேற்றியவாறு சமூக மேம்பாட்டிற்காக அலுவல் மேற்கொள்வதனை நாம் மதிக்கின்றோம்.

விழுமியம் 03 - பல்வகைமை மற்றும் உள்ளடக்கம்
நாம் பல்வகைமையை மதித்தல் மாத்திரமன்றி எமது நிறுவனம் மற்றும் சமூகம் பல்வகைமையின் ஊடாக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதனை உறுதி செய்வதற்காக எமது பண்பாடுகள், நம்பிக்கைகள், பின்னணி, திறமைகள் மற்றும் அலுவல் நோக்குநிலையின் மாற்றங்களை ஏற்று விருத்திசெய்யும் உள்ளீர்ப்பு கலாசாரத்தை நாம் மதிக்கின்றோம்.

விழுமியம் 04 - சமூக ஆன்மீகம்
உட்பொருளாக மற்றும் ஆன்மீகமாக அபிலாசைகளைப் பரிமாறிக்கொள்ளும் பிரிவினராக “குழுவாக” மாறுவதனை “நாம்” மதிப்பதுடன் அவ்வாறு நாமே சமூகமொன்றாகக் கட்டியெழுப்புவதனை நாம் மதிக்கின்றோம்.

விழுமியம் 05 - நாம் மேற்கொள்பவைகளை ஒப்படைத்தல்
உயர்கல்வி நிறுவனமொன்றாக நாம் பேணிவர வேண்டிய இரகசியத்தன்மை மீறப்படாத அளவுக்கு அறிவு மற்றும் தகவல்களுக்காக வரையறுக்கப்படாத பிரவேசத்தை செயலூக்கத்துடன் ஊக்கப்படுத்துவதுடன் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களிடையே மற்றும் அதனையும் தாண்டி பண்பாட்டுடனான சரியான நடத்தையை நாம் ஊக்குவிக்கின்றோம்.

பணிப்பாளர் அவர்களின் மதிப்பாய்வறிக்கை



கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை மற்றும் வருடாந்த நிதிநிலை அறிக்கை தொடர்பாக மீளாய்வொன்றை மேற்கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கொவிட்-19 தொற்று நோய் உலகம் முழுவதும் மனிதர்களின் அன்றாட நடத்தைகள் மற்றும் அபிலாஷைகளை கவனிக்கத்தக்க வகையில் மாற்றியுள்ளது. தொற்றுநோயானது, பாடசாலை முறைமை, கற்பித்தல் முறைகள், தொழில்வாய்ப்புகள், தொழிற்படைகளுக்கான தேவை, நிறுவனத்தின் தொழில்பாடுகள் மற்றும் நிருவாகம் அடங்கலாக மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் பெரும்பாலான துறைகளில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும், 2021 ஆம் ஆண்டில் நிறுவனச் செயற்பாடுகள் மீது கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு மனிதவள மேம்பாட்டு நிறுவனம் குறிப்பிடப்பட்ட வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் நோக்கம் யாதெனில், இலங்கையில் ஊழியர் உயர் கல்வியை மேம்படுத்தலாகும். இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தின் ஊழியர்களுக்கான உயர் கல்வி வழங்குகின்ற ஒரே நிறுவனமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தை அறிமுகப்படத்தலாம். மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தால் 2021 ஆம் ஆண்டுக்காக பல சான்றிதழ், டிப்ளோமா, உயர் டிப்ளோமா, பட்டப்படிப்புகள் மற்றும் முதுகலைமாணி பட்டதாரிகளை உருவாக்க முடிந்தமை பெருமைக்குரிய விடயமாகும். மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் சான்றிதழ் கற்கைநெறிகள், டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள், பட்டப்படிப்பு மற்றும் முதுகலைமாணி பட்டப்படிப்புகள் அடங்கலாக எல்லா கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக எமது மாணவர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் உளப்பாங்கு என்பவற்றை மேம்படுத்துவதை உறுதிப்படுத்தப்படுகிறது. கற்பித்தல் கற்றல் செயற்பாடு மற்றும் ஆராய்ச்சிகள் உயர் கல்வியிலிருந்து பிரிக்க இயலாது என்பதை நாம் அறிவோம், ஆகையால் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் கல்விசார் பதவியணி இந்த அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தி கல்வியின் சுதந்திரத்தைப் பராமரிப்பதற்கு அவரக்ளின் கல்விசார் கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுகின்றது.

கற்றலின் விருப்பம் மற்றும் அர்ப்பணிப்புள்ள நபர்கள், அவர்கள் கண்ட கனவுகளை எம்முடன் கற்பதன்மூலம் நனவாக்கி கொள்ளலாம். எமது நோக்கம் யாதெனில், உலகளாவிய சூழலில் முற்போக்கு சமூக அபிவிருத்திக்காக மனிதவளங்களை வலுவூட்டுவதற்கு கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சிகளின் சிறப்பு நிலையமாக விலங்குதலாகும். தலைமைத்துவம், தொழில்முயற்சி மற்றும் விமர்சன ரீதியான சிந்தனை போன்ற துறைகளில் திறன் அபிவிருத்தி மீது கவனம் செலுத்தப்பட்டு பல்வேறு முகாமைத்துவ, முகாமைத்துவம் சாராத ஊழியர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கான கற்கைகள், ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி முறைகளுக்காக மனதவள மேம்பாட்டு நிறுவனம் தேசிய ரீதியாக போட்டியுடன்கூடிய மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல வாய்ப்புகளை வழங்குகின்றது. மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் பதவியணியின் ஒத்துழைப்பு, அதி நவீன தொழில்நுட்பம், மற்றும் மனிதவள அபிவிருத்தி முறைமைகளை பயன்படுத்தி மாணவர்களுக்கு மிகவிசேடமான கற்கை வாய்ப்புகள் மற்றும் அனுபவங்களை மேம்படுத்த முடியுமென்பதுடன், அது மிக பயனுள்ள ஊழியர்களாவதற்கு அவர்களின் ஆற்றலை விருத்தி செய்துகொள்வதற்கு உதவியாக அமையும். சுய அறிவை விருத்தி செய்வதன் முக்கியமான அம்சமாக கருதப்படுவது, அது மிக பயனுள்ள மற்றும் வெற்றிகரமான தொழிலுக்கு அடிப்பயைடாக அமைதலாகும். எமது நிறுவனம் எதிர்பார்க்கின்ற பெறுபேறு யாதெனில், செயற்பாட்டு சிந்தனை மற்றும் தரமான திறன் என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட மாணவர்களை, அவர்கள் தெரிவு செய்த தொழில் மற்றும் தொழில்வல்லுநர்கள் சமூகத்தில் வெற்றிகரமான ஊழியர்களாக்குதலாகும்.

தங்களது வாழ்க்கையின் நோக்கங்களை எய்துக் கொள்ளுதல் மற்றும் முற்போக்கு சமூகத்தின் பொருட்டு பங்களிப்பு வழங்குவதற்கு இயன்ற வகையில், தங்களது திறன் மற்றும் ஆற்றல்களின் மேம்பாடு கருதி, சிறப்பானதும் மனம் கவரும் வகையிலுமான வாய்ப்புகளை ஆய்வு செய்வதற்கு மனிதவள மேம்பாட்டு நிறுவனம் வாய்ப்பு அளித்துள்ளது.

பேராசிரியர் சாகர சந்திரசேகர
பணிப்பாளர்
மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

உள்ளடக்கம்

ஆண்டறிக்கை மற்றும - 2021

1. மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு....65
   1.1 மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவனம் பற்றி சுருக்கமாக....66
   1.2 2021 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் கற்கைநெறிகள்....66
   1.3 மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் முகாமைத்துவம்....67
   1.4 மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு....68
   1.5 மனிதவள முகாமைத்துவ நிறுவனத்தின் கல்விசார் குழு....69
   1.6. கோவிட்-19 தொற்றுநோய் பரவலின் போது மனிதவள மேம்பாட்டு நிறவனம்....71

2. 2021 ஆம் ஆண்டில் அபிவிருத்தி மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட அடைவுகள்

   2.1 அபிவிருத்திகள்....72
   2.2 அடைவுகள்....72
      2.2.1 கல்விசார் அடைவுகள்....73
      2.2.2 ஆண்டில் நடாத்தப்படட்ட செயலமர்வுகள் மற்றும் வலையமைப்பு கருத்தரங்கள்....73

3. ஆம் ஆண்டின் மீளாய்வு

   3.1 கற்கைப் பாடநெறிகள்....75
      3.1.1 பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்....75
      3.1.2 இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்....76
      3.1.3 நிறைவேற்று/ உயர் டிப்ளோமா கற்கைநெறிகள்....77
      3.1.4 டிப்ளோமா கற்கைநெறிகள்....78
      3.1.5 சான்றிதழ் கற்கைநெறிகள்....79
   3.2. 2021 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகள் பற்றிய விபரங்கள....80
   3.3 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்....82
   3.4 கல்வி, நிருவாகம், கல்வி உதவி மற்றும் கல்விசார் பதவியணியின் தகவல்கள் 2021....87
   3.5. நூலகம்....88

வருடாந்த நிதிநிலைக் கூற்றுகள் - 2021

நிறுவனம்சார் தகவல்கள்....90
தயாரித்தல் அடிப்படை....90
குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு....91
2021 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று....94
2021 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று....96
2020 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று....97
2021 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமைகள்/ தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று....98
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்....99
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் III ஆம் பிரிவின் இலக்கம் 17 (இ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட எதிர்கால எதிர்பார்ப்புக்கள் தொடர்பான அறிக்கை - 2021....120
கணக்காய்வு அறிக்கை....124
2021 ம் ஆண்டுக்கான கணக்காய்வு சம்பந்தமான கருத்துக்கள்....130

01. மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு ஏறத்தாழ நான்கு தசாப்தங்களையும் பார்க்க அதிகமான காலப்பகுதிக்கு உரிமை கூறுவதுடன், அதன் முன்னோடி நிறுவனமான ஊழியர் கல்வி நிறுவனம் 1979 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க விதிக்கோவையின்கீழ் 1975 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டில் ஊழியர் கல்வி நிறுவனம், மனிதவள மேம்பாட்டு நிறுவனமாக பெயரிடப்பட்டதுடன், அது 2006 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க விதிக்கோவையின் மூலம் திருத்தம் செய்யப்பட்டது. 2017 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 2033/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தம் செய்த விதிக்கோவைமூலம் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்திடம் பட்டங்கள், டிப்ளோமா, சான்றிதழ்கள் மற்றும் ஏனைய கல்வி சிறப்பு சான்றிதழ்களை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதிய 2219/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மீண்டும் விதிக்கோவை திருத்தம் செய்யப்பட்டதுடன், குறித்த விதிக்கோவை 2021 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க மனிதவள மேம்பாட்டு விதிக்கோவையாக பிரகடனப்படுத்தப்பட்டது. மனித வள மேம்பாட்டு நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவனமாகும்.

நான்கு தசாப்த காலப்பகுதிக்கு அதிகமான வரலாற்றில் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் அதன் கட்டமைப்புக்குள் பல்வேறு மாற்றங்களையும் புதிய அபிவிருத்திகளையும் அடைந்துள்ளதுடன், தனியார் துறையின் வளர்ச்சி, அறிவுசார் பொருளாதாரத்தின் தோற்றம் மற்றும் தொழிற்படையின் பூகோளமயமாக்கள் என்பன இவற்றுல் சில குறிப்பிடத்தக்கவைகளாகும். இந்த அபிவிருத்திகளை தழுவும் அதன் முயற்சியில் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் தொடர்ச்சியாக பரிணாமம் அடைந்துள்ளதுடன், அதன்போது அதன் அசல் நோக்கமான "சேவை குழுக்கள்" இற்கு கல்வி வழங்குவதில் புதிய அர்த்தத்தைக் கொண்டுள்ளது. தற்போது "சேவைக் குழுக்களாக" முகாமைத்துவம்/ தொழில்சார் "சேவைக் குழுக்கள்" என்பவற்றுக்காக செயலாற்றுவதுடன், மனிதவள மேம்பாட்டு நிறுவனம் இந்த முகாமைத்துவம்/தொழில்சார் சேவைக் குழுக்களின் மனிதவள ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கு அரப்பணிப்புடன் பணியாற்றுகின்றது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் நிறுவனமாக செயற்படுவதால் நிறுவனத்தின் கற்கை நடவடிக்கைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பாரிய மேற்பார்வைக்கு உள்ளாகின்றது. எந்தவொரு உயர் கல்வி நிறுவமும் பேணப்பட வேண்டிய கல்வி நடவடிக்கைகளின் உயர் தரத்தினை பராமரித்தல் மற்றும் சிறந்த பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் பொறுப்பாக செயற்படுகின்றது.

தொழிலாளர் கல்வி நிறுவனம் தொடக்கத்தில் அனைத்து வகையான வேலையாட்களுக்கும் ஒரு பணியாளராக அவர்களுடைய வேலைத் தலத்தில் பயனுறுதியான பங்களிப்பினை வழங்க அவர்களுடைய பொறுப்புகளை புரிந்துக்கொள்ளதல் மற்றும் அவர்களுடைய திறன்களை தலைமைத்துவப் பண்புகளை மேமப்டுத்தும் வகையில் ஏற்றுக்கொள்ளத்தக்க விரிவான உயர் மட்டத்திலான கல்வி வசதிகளை வழங்கம் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அதன்மூலம் அவர்களுக்க தமது சேவை நிலையத்தில் பயனுள்ள பங்களிப்பினை வழங்க இயன்றதுடன், முக்கியமாக 1983 ஆம் ஆண்டு வரை குறித்த பட்டம் கலைமாணி பட்டமாக வழங்கியுள்ளது. எவ்வாறாயினம், 1986 ஆம் ஆணடில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் தொழிலாளர் கல்வியில் இளமாணிப் (BLE) படட்த்தை வழங்க தொடங்கியது. 2007 ஆம் ஆணடு காலப் பகுதியில் மனிதவள மேமப்டாடு நிறுவனம் அதன் கல்விசார் நடவடிகல்ககளை விரிவாக்கியதுடன், முதுகலைமாணி பட்டங்கள் வழங்குவதனையும் ஆரம்பித்தது.

1.1. மனிதவள மேம்பாட்டு நிறுவனம் பற்றி சுருக்கமாக


2021 ஆம் ஆணடில் மனிதவள மேமப்டாடு நிறுவனம் 438 முதுகலைமாணி பட்டப்படிப்பு மாணவர்களும் 549 இளமாணி பட்டப்படிப்பு கற்கின்ற மாணவர்களும் என்ற வகையில் 2,100 மாணவ மாணவிகளுக்கு கல்வியை வழங்கியுள்ளது. மனிதவள மேமப்டாடு நிறுவனம் அது அமைக்கப்பட்டதன் நோக்கத்தைக் கவனத்தில்கொண்டு மாற்றமடையும் கல்வித் திட்டங்களை வழங்குகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி பெற்றுக்கொண்டு புதிய பட்டப்படிப்புகளான தொழில் முகாமைத்துவ கலைமாணி பட்டம் (பொது) மூன்று ஆண்டுகளிலான கற்கைநெறிக்கு முதலாவது மாணவர் குழுவினை சேர்த்துக்கொள்வதற்கு ஆண்டில் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

புதிய பட்டப்படிப்பு திட்டம் உயர்தரத்துடன், தொழில்புரியும் பட்டதாரிகளுக்கு சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் கற்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எமது முதலாவது பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

பிரதானமாக உழைக்கும் சமூகத்திற்கு அவர்களின் வேலை சூழலுக்கு பொருந்துகின்ற வகையில் தனது ஆற்றல்கள, திறன்கள் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்கள் மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்படும் பிரதான 04 குழுக்களின்கீழ் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. அவை, 04 பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள், 02 பட்டப்படிப்பு கற்கைநெறிகள், 02 உயர்/ நிறைவேற்று டிப்ளோமா கற்கைநெறிகள் 05 டிப்ளோமா கற்கைநெறிகள் மற்றும் 10 சான்றிதழ் கற்கைநெறிகள் என்ற வகையிலாகும். இந்த கற்கைநெறிகள் 2018-2022 நிறுவன திட்டத்தின் பிரகாரம் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

மொத்த மாணவர் பதிவுகள் - 2021



மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2021, ம.வ.மே.நி.

2021 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மொத்தமாக 2,082 மாணவர்கள் பல்வேறு கற்கை-நெறிகளைப் பயின்றுள்ளனர்.

1.2 2021 ஆம் ஆண்டில் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் கற்கைநெறிகள்

பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள்

- சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுகலைமாணிப் பட்டம்
- வணிக முகாமைத்துவ முதுகலைமாணிப் பட்டம்
- மனிதவள முகாமைத்துவ முதுகலைமாணிப் பட்டம்
- இடர் பகுப்பாய்வு, முகாமைத்துவ மற்றும் கட்டப்பாடு தொடர்பான விஞ்ஞான முதுகலைமாணிப் பட்டம்

இளமாணிப் பட்டப்படிப்பு கற்கைநெறிகள்

- தொழிலாளர் கல்வி முகாமைத்துவ இளமாணி கற்கைநெறி
- தொழில் முகாமைத்துவ இளமாணி கற்கைநெறி

நிறைவேற்று/ உயர் டிப்ளோமா மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகள்

- சுற்றுலா, நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் சேவைகளின் முகாமைத்துவ நிறைவேற்று டிப்ளோமா கற்கைநெறி
- ஆலோசனை மற்றும் உளவியலில் உயர் டிப்ளோமா கற்கைநெறி
- சேவை முகாமைத்துவத்தில் டிப்ளோமா
- போதைப்பொருள் துஷ்பிரயோக முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி
- ஆலோசனை மற்றும் உளவியலில் டிப்ளோமா கற்கைநெறி
- மேலதிக மொழியாக தமிழில் மொழி டிப்ளோமா கற்கைநெறி
- தொழிலாளர் கல்வியில் டிப்ளோமா கற்கைநெறி

ான்றிதழ் கற்கைநெறிகள்

- ஆங்கில மொழி சான்றிதழ் கற்கைநெறி
- பாடசாலையை விட்டுச் செல்பவர்களுக்கான குறுகிய கால ஆங்கில கற்கைநெறி
- அடிப்படை ஆங்கிலத்தில் சான்றிதழ் பாடநெறி அடிப்படை ஆங்கில மொழி சான்றிதழ் கற்கைநெறி
- தமிழ் மொழி சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படை மட்டம்
- தமிழ் மொழி சான்றிதழ் கற்கைநெறி - இடைநிலை மட்டம்
- கணினி பயன்பாடுகளில் சான்றிதழ் கற்கைநெறி
- ஜப்பான் மொழி சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படை மட்டம்
- கொரிய நாட்டு மொழி சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படை மட்டம்

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் எதிர்பார்ப்பு யாதெனில், சவால்களுடன் கூடிய உலகளாவிய நிலைமைகளை எதிர் நோக்குதல் மற்றும் எமது தேசத்தின் அபிவிருத்தியில் விவேகமுள்ள ''அறிவைப் பயன்படுத்தும்" மனிதவள மேம்பாட்டு அடித்தளத்தை வலுப்படுத்துவதற்காக முழுவதுமாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறந்த நிறுவனமாக மாறுவதாகும். இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக மனிதவள மேம்பாட்டு நிறுவனம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து மரபுரிமையாகப் பெறப்பட்ட வளமான கல்விசார் பாரம்பரியம் மற்றும் உயர் கல்விசார் தரங்களை உறுதிசெய்தவாறு பாரிய பரிணாமத்திற்கு உட்பட்டு வருகின்றது. அதன் கற்கைநெறிகளுக்காக உள்நாட்டு மற்றும் உலகளாவிய தரப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சிறந்த நிர்வாகத்திற்கான தரங்களை பூர்த்திசெய்தல், ஊழியர்களிடையே உயர் கேள்வியைக்கொண்ட அடையாளமாக மற்றும் சமூகம் சார்ந்த பொறுப்புக்களைக்கொண்ட அரச நிறுவனமாக பரிணமித்தல் இந்த மாற்றத்தின் இலக்காகும்.

1.3. மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் முகாமைத்துவம்

ஒரு முழுநேர உத்தியோகத்தராகப் பணியாற்றும் நிறுவனத்தின் நிர்வாக மற்றும் கல்விசார் தலைவரான பணிப்பாளர், மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் கல்விசார் குழுவின் பரிந்துரையின் பேரில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவையின் அனுமதியுடன் துணைவேந்தரால் நியமிக்கப்படுவார். பணிப்பாளர் கல்விசார் குழுவின் தலைவராக, கற்கைகள் சபைகளின் ஒரு பதவிவழி உறுப்பினராக இருக்கின்றார். அவர் நிறுவனத்தின் பிரதான பொறுப்புக் கூறும் அலுவலராகவும் நிறுவனத்தினுள் ஒழுக்காற்றிற்குப் பொறுப்பான அலுவலராகவும் உள்ளார்.


பேராசிரியர் ஜே.ஏ.எஸ்.கே. ஜயகொடி அவர்களின் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் திகதி நிகழ்ந்த திடீர் மரணம் காரணமாக திருமதி கே.பி. மாதோதாராச்சி (சிரேஷ்ட விரிவுரையாளர், மனிதவள மேம்பாட்டு நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம்) ஒரு புதிய பணிப்பாளரை நியமிக்கப்படும் வரை மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் பதில் பணிப்பாளராக 2021 சனவரி 31 ஆம் திகதி வரை சேவையாற்றியதுடன், 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் மூன்று ஆண்டுகள் பொருட்டு நிரந்தர பணிப்பாளராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடத்தில் பொருளாதார பிரிவில் இணைக்கப்பட்டிருந்த சிரேஷ்ட பேராசிரியர் திரு. எச்.டீ. கருணாரத்ன நியமிக்கப்பட்டார்.

2021 மார்ச் மாதம் தொடக்கம் நடைமுறைப்படும் 2021 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க விதிக்கோவைமூலம் நிறுவனங்களின் நிருவாகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டதுடன், புதிய விதிக்கோவை பிரகாரம் நிறுவனத்தின் பிரதான நிருவாகக் கட்டமைப்பு முகாமைத்துவ சபை, கல்வி ஒருங்கிணைப்புக் குழு, கல்விச் சபைகள் மற்றும் குழுக்கள் மூலம் செயற்படுகின்றது. பணிப்பாளர் நிறுவனத்தின் நிருவாக மற்றும் கல்வித் தலைவராக முழுநேர காலத்திற்கு சேவையில் ஈடுபடும் அலுவலராவார்.

புதிய விதிக்கோவை பிரகாரம் நிறுவனத்தின் பணிப்பாளர் நியமனம் செய்யும் அதிகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்போது, பணிப்பாளர் மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினது பரிந்துரைமீது கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆளுகைச் சபையின் இணக்கப்பாட்டுடன் துணைவேந்தரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பரிந்துரை செய்யப்படுவதுடன், பணிப்பாளர் தெரிவு செய்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும். பணிப்பாளர் முகாமைத்துவ சபையில் தலைவர் ஆவதுடன், கல்விக் குழுவிற்காக பதவி வழியில் நியமனம் பெற்ற அங்கத்தவரும் ஆவார் அவர் நிறுவனத்தின் பிரதான கணக்கு அலுவலராகவும் செயற்படுவதுடன், நிறுவனத்தில் ஒழுக்காற்றை பராமரிக்கும் பொறுப்பையும் வகிப்பவர் ஆவார்.


நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு கீழே குறிபிடப்பட்டுள்ளது.

1.4. மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு (2021 ஏப்ரல் மாதம் வரை)



இந்த நிறுவனக் கட்டமைப்பு நிறுவனத்தின் இணைந்த திட்டம் மற்றும் செயல் திட்டங்களிற்கு இணங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

1.4.1 மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு (2021 மே மாதம் வரை)



1.5. மனிதவள முகாமைத்துவ நிறுவனத்தின் கல்விசார் குழு

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக நிறுவனக் கட்டமைப்பிற்கு அமைவாக நான்கு (04) கற்கை சபைகள் கல்விசார் குழுவின் அங்கீகாரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. புதிய விதிக்கோவைகளின் திருத்தங்களின் பின்னர் 2021 மே மாதம் தொடக்கம் முகாமைத்துவ சபையாக பிரதான நிருவாக கட்டமைப்பு மாற்றப்பட்டதுடன், கல்வி விடய துறை பிரகாரம் தாபிக்கப்பட்ட கல்விச் சபைகள், கல்வி ஒருங்கிணைப்புக் குழுவிற்கு உட்படும். மேலும் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 07 குழுக்களை நிருவாகக் கட்டமைப்பு கொண்டமைந்துள்ளது.

1.5.1. முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள் (2021 மே மாதம் வரை) 03 கூட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.)

பெயர்	நியமனம் செய்யப்பட்ட அதிகாரம்
திருமதி. கே.பீ. மாதொட்டஆரச்சி - பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (2021 சனவரி மாதம் 31 வரை)	தலைவர்
சிரேட்ட பேராசிரியர் எச்.டீ. கருணாரத்ன (2021 பெப்ருவரி மாதம் தொடக்கம்)	தலைவர்
பேராசிரியர் திரு. உப்புல் சொன்னாதர	பதவிவழி நியமன அங்கத்தவர்
கலாநிதி எல்.எம். கப்பில பண்டார	பதவிவழி நியமன அங்கத்தவர
பேராசிரியர் திரு. லசந்த மானவடு	பதவிவழி நியமன அங்கத்தவர
பேராசிரியர் திரு. யு.ஜீ.ஏ. புஸ்வேவல	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
பேராசிரியர் திரு. கே.ஏ.பீ. சித்திசேன	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
கலாநிதி எம்.ஏ.சீ. கயத்ரி விஜேசுந்தர	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
கலாநிதி எஸ்,ஏ.எம்.கே. சமரகோன்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
திரு. பிரேமசந்திர ஏபா	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
திரு. எச்.எம்.டப். ஹேரத்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
பேராசிரியர் அஜித் திசாநாயக்க	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
திரு. டீ.எஸ். அமரசிங்க	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
பேராசிரியர் திரு. ஏ.ஏ. அசீஸ்	கல்விச் சபை பிரதிநிதியாளர்
கலாநிதி திரு. எம்.ஜீ.ஜீ. ஹேமகுமார	கல்விச் சபை பிரதிநிதியாளர்
கலாநிதி திரு. டப்.எஸ். சந்திரசேகர	கல்விச் சபை பிரதிநிதியாளர்
பேராசிரியர் டீ.ஏ.சீ. சில்வா	கல்விச் சபை பிரதிநிதியாளர்
திருமதி. ஜே.ஏ.டீ.டி.சரத் குமார	கல்விச் சபை பிரதிநிதியாளர்
திரு. எச்.டீ. தர்மசேகர	கல்விச் சபை பிரதிநிதியாளர்

1.5.2 முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் (2021 மே மாதம் தொடக்கம்) - 07 கூட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

பெயர்	நியமனம் செய்யப்பட்ட அதிகாரம்
சிரேட்ட பேராசிரியர் எச்.டீ. கருணாரத்ன (2021 பெப்ருவரி மாதம் தொடக்கம்)	தலைவர்
பேராசிரியர் திரு. உப்புல் சொன்னாதர	பதவிவழி நியமன அங்கத்தவர்
பேராசிரியர் திரு. லசந்த மானவடு	பதவிவழி நியமன அங்கத்தவர்
கலாநிதி திரு. கப்பில பண்டார	பதவிவழி நியமன அங்கத்தவர்
கலாநிதி டீ.எம்.ஏ. திசாநாயக்க	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
கலாநிதி எம்.ஏ.சீ. கயத்ரி விஜேசுந்தர	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
திரு. எச்.எம்.டப். ஹேரத்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
திரு. பிரேமசந்திர ஏபா	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
திரு. தமித்த விக்கிரமசிங்க	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
திரு. ஆர்.ஏ.யு. ரணவீர	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்பட்ட
திருமதி. ஜே.ஏ.டி.டீ. சரத் குமார (2021 அகஸ்ட் மாதம் தொடக்கம்)	பொது திறைசேரி பிரதிநிதியாளர்
பேராசிரியர் திரு. எம்.பீ.பீ. தர்மதாஸ	கல்விச் சபை பிரதிநிதியாளர்
கலாநிதி திரு. டப்.எஸ். சந்திரசேகர	கல்விச் சபை பிரதிநிதியாளர்
திரு. எச்.டீ. தர்மசேகர	கல்விச் சபை பிரதிநிதியாளர்

2021 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க விதிக்கோவையின் பிரகாரம் நிறுவனத்தில் காணப்பட்ட 04 கல்விச் சபைகள் மற்றும் 07 குழுக்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக கல்வி ஒருங்கிணைப்பு குழு என்ற பெயரில் புதிய குழு நியமனம் செய்யப்பட்டதுடன், 04 கல்வி குழுக்களின் பரிந்துரைகள் முகாமைத்துவ சபையிடம் சமர்ப்பித்தல் இந்த குழு ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

1.5.3. மனிதவள முகாமைத்துவ நிறுவனத்தின் கற்கைச் சபைகளினால் நடாத்தப்பட்ட கூட்டங்கள்

கற்கைச் சபை	நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை
பட்டப்பின் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சி கற்கைச்சபை	09
இளமாணிப் பட்ட கற்கைகள் தொடர்பான கற்கைச்சபை	10
மொழிகள் கற்பித்தல் தொடர்பான கற்கைச்சபை	07
விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கற்கைச்சபை	11

1.5.4. மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் குழுக்கள்மூலம் நடாத்தப்பட்ட கூட்டங்கள்

கல்விசார் குழுவுக்கு நேரடியாக பொறுப்புக்கூறும் 08 குழுக்களை நிறுவனக் கட்டமைப்பு கொண்டுள்ளது. அந்தக் குழுக்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

குழு	நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை
கல்வி ஒருங்கிணைப்புக் குழு	07
கணக்காய்வுக் குழு (ஒரு சுயாதீனக் குழுவாகும்)	04
நிதிக் குழு	06
நூலக குழு	03
கொள்முதல் குழு	15
பயிற்சி மற்றும் அபிவிருத்திக் குழு	00*
ஆராய்ச்சி மானியக் குழு	01
உள்ளக தரப் பாதுகாப்ப குழு	01

1.6. கோவிட்-19 தொற்றுநோய் பரவலின் போது மனிதவள மேம்பாட்டு நிறவனம்

கோவிட்-19 தொற்றுநோய் பரவலின் காரணமாக 2020 மார்ச் நடுப்பகுதியில் நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகள் கணிசமாக பாதிக்கப்பட்டன. கணினித் தளங்களைப் பயன்படுத்தி கல்வித் திட்டங்களைத் தொடர மனிதவள மேம்பாட்டு நிறுவனம் எல்லா முயற்சிகளையும் எடுத்தது. சவால்கள் இருந்தபோதிலும், மனிதவள மேம்பாட்டு நிறுவனம் மாணவர்களுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுவதற்காக தொடர்ந்து ஆதரவையும் வளங்களையும் வழங்கி வந்தது. மேலும், மனிதவள மேம்பாட்டு நிறுவனம் மாணவர்களின் மாறிவரும் தேவைகளை நிவர்த்தி செய்ய முடிந்தது மற்றும் தேவைகள் நிறைவேறும் வரை அதன் ஆதரவை விரிவுபடுத்து.

மேலும், நோயின் திடீர் பரவலின் போது மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக ஊழியர்கள் மற்றும் மாணவர்களைப் பாதுகாக்க பல முயற்சிகளை எடுத்தது. முன் என்றுமில்லாதபடியான சவால்களாக இருந்தபோதிலும், நிறுவன குறிக்கோள்களை அடைவதில் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் தனது கவனத்தைத் தொடர்ந்தது.

“வீட்டிலிருந்து வேலை செய்தல்” “work from home” என்ற கருத்து அறிமுகப்படுத்தப்பட்டது. இணைய கூட்டங்கள் மூலம் (Virtual) ஊழியர்கள் இணைக்கப்பட்டனர், இது மனிதவள மேம்பாட்டு நிறுவனம் அதன் நிறுவன நோக்கங்களை அடைய உதவியது.

2. 2021 ஆம் ஆண்டில் அபிவிருத்தி மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட அடைவுகள்

2.1 அபிவிருத்திகள்

- 2021 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதிய 2219/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி விதிக்கோவை திருத்தம் செய்யப்படுதல். 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுகின்ற 2021 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க விதிக்கோவை மூலம் நிறுவன நிருவாக கட்டமைப்பில் மாற்றங்களை மேற்கொள்ளப்பட்டதுடன், புதிய விதிக்கோவை பிரகாரம் நிறுவனத்தின் பிரதான நிருவாக கட்டமைப்பு முகாமைத்துவ சபை மற்றும் கல்வி ஒருங்கிணைப்புக் குழு, கல்விச் சபை மற்றும் குழுக்கள் மூலம் நடைமுறைப்படுகின்றது.

- ஊழியர் சமூகத்தின் பொருட்டு விரிவான வாய்ப்புகளை வகுத்து தொழிற் முகாமைத்துவத்தை விசேடமாகக்கொண்ட புதிய இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு பணிகளை மேற்கொண்டு, அதன் முதலாவது மாணவர் குழுக்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2021 ஆம் ஆண்டில் ஆற்றல் கிடைக்கப்பெற்றது.

- புதிய பட்டப்படிப்பு கற்கைநெறி தொழில் முகாமைத்துவ இளமாணி (பொது) மற்றும் தொழில் முகாமைத்துவத்தின் சிறப்பு பட்டமாக (சிறப்பு) கௌரவ பட்டப்படிப்பு கற்கைநெறி வரை உயர்த்துவதற்கு முடிந்தது. அதன்படி, மாணவர்களுக்கு விரிவான வாய்ப்புகளை அளிக்கப்பட்டு பாடவிதானங்களை அபிவிருத்தி செய்து புதிய தோற்றத்துடன், சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நிறுவனத்திற்கு வருகை தரும் பிரதான நுழைவாயிலை பௌத்தாலோக்க மாவத்தை வரை விரிவாக்கப்பட்டது.

- புதிய நுழைவாயில் முன்பாக மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் புதிய பெயர் பலகை பொருத்துதல்.

- 02 போதனா மண்டபங்கள், சிற்றுண்டிச்சாலை மற்றும் விரிவுரையாளர்களது அறைகளுக்கு முன்பாக உள்ள CFL பல்புகளுக்கப் பதிலாக LED பல்புகள் பொருத்தப்பட்டன.

- CCTV இயந்திரங்கள் இற்றைப்படுத்தப்பட்டன.

2.2 அடைவுகள்

2.2.1 கல்விசார் அடைவுகள்

- உயர் கல்விக்கான புதிய வழிகளை திறக்கப்பட்டு பட்டப்பின் படிப்பு டிப்ளோமா நடாத்துவதற்கு தேவையான சட்ட–ஒழுங்குவிதிகளுக்காக கொழும்பு பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு இயன்றது.

- தொழிற் கல்வி இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம், எல்லா பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், நிறைவேற்று/உயர் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் போன்று சான்றிதழ் கற்கைநெறிகள் ஆகிய எல்லா நிகழ்ச்சித்திட்டங்களினதும் இடைக்கால செயற்பாடுகள் கற்கை கற்பித்தல் முறையினை வெற்றிகரமாக பயன்படுத்தப்படுகிறது.

- கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் தவிர்ந்த ஏனைய எல்லா கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் கற்கை முகாமைத்துவ முறைமை (LMS) வெற்றிகரமாக பயன்படுத்தப்படுகிறது.

- டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு கலப்பு கற்கை – கற்பித்தல் (BTL) முறைமை

வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகிறது.

- நிறைவேற்று/ உயர் டிப்ளோமா மற்றும் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு பாடவிதானங்களை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

- மொழி கற்கை பிரிவு மூலம் ஜப்பன் மொழி சான்றிதழ் கற்கைநெறி மற்றும் கொரிய நாட்டு மொழி சான்றிதழ் கற்கைநெறி அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் புதிய பரிமாணமாக விளையாட்டுத்துறை விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ சான்றிதழ் கற்கைநெறி அறிமுகப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கல்விசார் பணியாற்றொகுதியில் ஒரு அங்கத்தவர் வெளிநாடு சென்று பட்டப்பின் படிப்புக்காக கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்.

- ஜெனரால் ஸ்ரீமத் ஜோன் கொத்தளாவளை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 14 ஆவது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில் சட்டம் தொடர்பான ஆராய்ச்சி ஆய்வு அம்வில், சிறந்த ஆராய்ச்சி பத்திரம் பொருட்டான விருது மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் விரிவுரையாளர் திரு. கே.ஏ.ஏ.என் திலகரத்ன அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- மெக்ஸிகோவில் நிதிசார் நிறைவேற்று நிறுவனம் மற்றும் EY மூலம் நடாத்தப்பட்ட 37 ஆவது நிதி ஆராய்ச்சி விருது விழாவில் மெக்ஸிகோவில் ஆளுநர் அவர்களால் வழங்கப்படும் சிறந்த ஆராய்ச்சி பத்திரத்திற்கு ஏற்புடையதாக சர்வதேச நிதிசார் ஆராய்ச்சி விருது (IMEF & EY Award) – முதலாவது இடம், மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் விரிவுரையாளர் திருமதி டீ.எச்.டீ. நதிஷா அவர்களால் பெறப்பட்டுள்ளது.

- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தால் நடாத்தப்படும் வியாபார நிருவாக முதுகலைமாணி பட்டப்படிப்பு கற்கைநெறியின் சிறந்த செயலாற்றுகை பொருட்டான, தேசிய விருது பேராசிரியர் உதித லியனகே ஞாபகார்த்த தங்க பதக்கம் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் விரிவுரையாளர் திருமதி. சீ.எல். எதிரிசிங்க அவர்களால் பெறப்பட்டது.

- ஜெனரால் ஸ்ரீமத் ஜோன் கொத்தளாவளை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் சட்ட முதுகலைமாணி கற்கைநெறியின் சிறந்த செயலாற்றுகைக்கான தேசிய விருது, மனிதவள மேம்பாட்டு நிறுவன்தின் விரிவுரையாளர் திரு. கே.ஏ.ஏ.என். திலகரத்ன அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- நூலக குறியீடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் டிஜிரல் களஞ்சியம் (IHRA/LDR) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2.2.2 ஆண்டில் நடாத்தப்டப்ட செயலமர்வுகள் மற்றும் வலையமைப்பு கருத்தரங்கள்

- மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் 2 ஆவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு 2021 ஆகஸ்ட் மாதம் 05 மற்றும் 06 ஆகிய திகதிகளில் இணையத்துடன் நேரடி தொடர்பு மூலம் வெற்றிகரமாக நடாத்துவதற்கு இயன்றது. இம்முறை அதன் தலைப்பு "மனிதவளங்களின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் மீது கொவிட்-19 நெருக்கடியின் தாக்கம் என்பதாகும். அதன் பிரதான விரிவுரை ஜப்பானில் மெயிஜோ பல்கலைக்கழகத்தின், வெளிநாட்டு கல்வி பீடத்தின் பேராசிரியர் திரு. ஆனந்த குமார அவர்களால் மெற்கொள்ளப்பட்டது. வியாபார மற்றும் அரச முகாமைத்துவம், சேவை முகாமைத்துவம், சமூகவியல், நிலைபேறு, இடர் முகாமைத்துவம் மற்றும் சட்டம், மொழி

மற்றும் இலக்கியம் ஆகிய தலைப்புகளின்கீழ் இந்த மாநாடு நடைபெற்றது.

- ஆலோசனை உளவியல் உயர் டிப்ளோமா கற்கைநெறி மற்றும் ஆலோசனை உளவியல் டிப்ளோமா கற்கைநெறி ஆகிய கற்கைநெறிகளில் 2019 ஆவது கல்வி ஆண்டின் மாணவர் குழுக்களின் பொருட்டு, செய்முறை பயிற்சி செயலமர்வு மார்ச் மாதம் மனிதவளங்கள் மேம்பாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

- மனிதவளங்கள் முகாமைத்துவ முதுகலைமாணி பட்டப்படிப்பு கற்கைநெறி மற்றும் வியாபார முகாமைத்துவ முதுகலைமாணி பட்டப்படிப்பு கற்கைநெறிகளில் 2019 ஆம் ஆண்டின் மாணவர்களின் பொருட்டு, கருத்திட்டப் பிரேரணைகளை சமர்ப்பிக்கும் இணையத்துடன் நேரடி தொடர்புடனான செயலமர்வு, முகாமைத்துவ கோட்பாடுகள் மற்றும் பயன்பாடு தொடர்பான செயலமர்வு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.

3. ஆம் ஆண்டின் மீளாய்வு

3.1 கற்கைப் பாடநெறிகள்

2020 ஆம் ஆண்டில் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் 05 பிரதான பிரிவுகளின் கீழ் 20 கற்கைப் பாடநெறிகளை நடாத்தியது.

- பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
- இளமாணிப் பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
- நிறைவேற்று/ உயர் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்
- டிப்ளோமா பாடநெறிகள்
- சான்றிதழ் பாடநெறிகள்

3.1.1 பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

மனிதவள மேம்பாட்டு அபிவிருத்தி நிறுவனம் 4 பட்டப்பின் படிப்புகளைச் சமர்ப்பிக்கின்றது. மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாணவர்கள் முதலாவதாக தமது தொழில் வளர்ச்சியினை விரைவுபடுத்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் அறிவுத் தேர்ச்சிபெற்ற, தமது தொழில் பாதையில் முன்னேற்றம் காணுதல், தொழில் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் சம்பாதிக்கும் திறனை விருத்தி செய்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பொதுவாக மாணவர்கள் எமது நிறுவனத்துடன் இணைந்துக்கொள்கின்றனர்.

மனிதவள மேம்பாட்டு நிறுவனம் அதன் சொந்த கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துகிறது. இது தொடர்ச்சியான மதிப்பீடுகளை உள்ளடக்கியது. மேலும் செயலமர்வுகள் மற்றும் கள கல்வி சுற்றுலாக்கள் மற்றும் வலையமைப்பு செயலமர்வுகள் ஊடாக கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாடத்திட்டத்தை மேலும் மேம்படுத்துவதற்காகவும் மாணவர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் எப்போதும் மாணவர்களின் கருத்துக்களில் கவனம் செலுத்துகிறது. அதன் பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் சந்தை தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை கற்கும் மாணவர்கள் தேசிய பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கிறார்கள்.

தற்போது மனிதவள மேம்பாட்டு நிறுவனம், மாணவர்களின் பொருட்டு முகாமைத்துவ விடய துறைக்கு ஏற்புடையதாக 04 (நான்கு) பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளைப் பராமரிக்கின்றது. அவை,


- வணிக முகாமைத்துவத்தில் முதுகலைமாணி பட்டம் தொடர்பான கற்கைநெறி
- மனித வள முகாமைத்துவத்தில் முதுகலைமாணி பட்டம் தொடர்பான கற்கைநெறி
- சேவை முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுகலைமாணி தொடர்பான கற்கைநெறி
- இடர் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் நிருவாக விஞ்ஞான முதுகலைமாணி கற்கைநெறி என்ற வகையிலாகும்.

வியாபார முகாமைத்துவ துறையில் தேவைப்பாடுகளை கணிப்பிடுவதற்காக வியாபார முகாமைத்துவ முதுகலைமாணி கற்கைநெறி கவனம் செலுத்தியுள்ளதுடன், மனிதவள முகாமைத்துவ துறையில் தற்கால தேவைகளின் மீது மனிதவள முகாமைத்துவ முதுகலைமாணி கற்கைநெறி கவனம் செலுத்தியுள்ளது. சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுகலைமாணி பட்டம் எமது பல்கலைக்கழக முறைமையில் குறிப்பிடத்தக்க பட்டப்படிப்பு கற்கைநெறி ஆவதற்கு காரணம் யாதெனில், அது சேவை முகாமைத்துவம் பொருட்டு நடாத்தப்படுகின்ற ஒரே பட்டநிலை பின்படிப்பு பட்டமாகும். அது சேவைப் பிரிவின் சேவைகள் தொடர்பான எந்தவொரு பிரச்சினையையும் நம்பிக்கையுடன் சந்திப்பதற்கு தேவைப்படுகின்ற எண்ணக்கரு மற்றும் பகுப்பாய்வு கருவிகளை வடிவமைப்பதற்கு கவனம் செலுத்தியுள்ளது.

புவியியல் தகவல் விஞ்ஞான முதுகலைமாணி கற்கைநெறி பொருட்டு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் மாண-வர்களை பதிவு செய்யவில்லை என்பதுடன், பதிவாகிய மாணவர்கள் பொருட்டு கற்கைநெறி பூர்த்தி செய்வதற்கு

அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

2021 ஆம் ஆண்டில் பட்டப்பின் படிப்பு கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் பட்டப்படிப்பு முடிவு செய்த விகிதாசாரம் 83% ஆகும்.



	வருடாந்த அனுமதி					பட்டம் பெற்றோர்				
	2017	2018	2019	2020	2021	2017	2018	2019	2020	2021
வியாபார முகாமைத்துவ முதுகலைமாணி பட்டப்படிப்பு கற்கைநெறி	95	115	96	70	59	127	125	64	86	73
மனித வளங்கள் முகாமைத்துவ முதுகலைமாணி பட்டப்படிப்பு	54	67	65	53	74	135	96	44	59	32
சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுகலைமாணி பட்டப்படிப்பு	0	77	0	40	83	54	62	73	0	0
புவித்தகவலியல் முதுகலை பட்டம்	0	0	0	0	0	54	5	55	5	0
இடர் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு விஞ்ஞான முதுகலைமாணி பட்டப்படிப்பு கற்கைநெறி	0	48	0	0	22	38	11	3	0	20

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் - 2021 ம.வ.மே.நி

**மேற்படி அட்டவணைகள் மற்றம் வரைபுகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள தரவுகள் ஏற்புடைய ஆண்டில் தகைமைகளை பூர்த்தி செய்த அல்லது பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை காண்பிக்கப்படுகிறது. அது குறித்த ஆண்டில் வருடாந்த ஆட்சேர்ப்பில் உள்ளடக்கப்படமாட்டாது.

3.1.2 இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்


3.1.2.1 தொழிற் முகாமைத்துவ இளமாணி பட்டப்படிப்பு/ தொழில் கல்வி இளமாணி பட்டப்படிப்பு

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதான குறிக்கோள்களுக்கிடையில், போதுமானதும் தரத்துடன்கூடியதுமான மனிதவள ஆற்றலை விருத்தி செய்துக்கொள்ளுதல், தொழிற்படை போன்று முகாமையாளர்களின் கூட்டு தேர்வு மற்றும் கூட்டு முயற்சிக்காக கல்வி வழங்குதலும் அதன் பிரகாரம் தொழிற் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டம் ஆரமபிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சந்தை தேவைகளை கவனத்தில்கொண்டு மாணவர்களுக்கு விரிவான வாய்ப்புகளை ஏற்படுத்தி 2020 ஆம் ஆண்டில் தொழிற் முகாமைத்துவ இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டில், 193 மாணவர்கள் தொழிற் முகாமைத்துவ இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பதிவாகியிருந்ததுடன், அதில் 152 பேர் சிங்கள மொழியிலும் 41 பேர் ஆங்கில மொழியிலும் பங்குபற்றினார்கள்.

மனிதவள மேம்பாட்டு நிறுவனம்மூலம் நடாத்தப்படுகின்ற தொழிற் முகாமைத்துவ இளமாணி பட்டப்படிப்பு (பொது) மற்றும் தொழிற் முகாமைத்துவ இளமாணி பட்டப்படிப்பு (சிறப்பு) பட்டப்படிப்பு ஆகிய இந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் முகாமைத்துவ துறையின் விரிவான விடய துறைகள் உள்ளடக்கப்படுவதுடன், அவை முதற் தடவையாக சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடை பெறுகின்றது. தொழிற் முகாமைத்துவ இளமாணி பட்டப்படிப்பு மூன்று ஆண்டு நிகழ்ச்சித்திட்டமாவதுடன், அது இலங்கை தகவுத்திறன் வழிகாட்டலில் 5 ஆவது நிலையின்கீழ் வருகிறது. தொழிற் முகாமைத்துவம் இளமாணி (சிறப்பு) பட்டம் நான்கு ஆண்டு நிகழ்ச்சித்திட்டமாவதுடன், அது இலங்கை தகவுத்திறன் வழிகாட்டலில் 6 ஆவது நிலைக்குரியதாகும். கல்வி நோக்குநிலையில் ஏற்பட்ட இந்த குறிப்பிடத்தக்க மாற்றங்களுடன், இந்த புதிய கற்கைநெறிகளில் ஈடுபடுவதன் மூலம் அனுபவம் மற்றும் அறிவு ஆகிய இரண்டையும் பெறுவதற்கும், அவர்களின் தொழில் துறையில் உயர்ந்துசெல்வதற்கும், கீர்த்திமிக்க மற்றும் நாட்டின் முதலாம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள பல்கலைக்கழகமான கொழும்பு பல்கலைக்கழகத்தில் உள்ளவாரி பட்டப்படிப்பைப் பெறுவதற்கும் மிகவும் பொருத்தமானவையாகும்.

தொழிற் முகாமைத்துவ இளமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படினும், நாட்டில் நிலவிய கோவிட்-19 நிலைமை காணரமாக 2020 ஆம் ஆண்டில் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை. 2021 ஆம் ஆண்டில் தொழிற் கல்வி இளமாணி கற்கைநெறியின் மொத்த பட்டப்படிப்பு விகிதாசாரம் 77% ஆகும்.



மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் - 2021 ம.வ.மே.நி

**மேற்படி அட்டவணைகள் மற்றம் வரைபுகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள தரவுகள் ஏற்புடைய ஆண்டில் தகைமைகளை பூர்த்தி செய்த அல்லது பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை காண்பிக்கப்படுகிறது. அது குறித்த ஆண்டில் வருடாந்த ஆட்சேர்ப்பில் உள்ளடக்கப்படமாட்டாது.

3.1.3 நிறைவேற்று/ உயர் டிப்ளோமா கற்கைநெறிகள்


நிறைவேற்று டிப்ளோமா என்பது தொடர்புடைய தொழில் துறையில் ஈடுபடும் நிபுணர்களுக்கான தனித்துவமான கல்வித் தகுதியாகும். முகாமையாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளில் அவர்களின் அறிவை மேம்படுத்தவும் புதுப்பிக்கவும் வாய்ப்புகளை வழங்குவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அனைத்து நிறைவேற்று டிப்ளோமா பாடநெறிகளைப் பயிலுபவர்கள் அவர்களுடைய வாடிக்கையாளர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்போது அடிப்படையாக தமது நடத்தை முறைகளுக்கு சவால்விடும் சொந்த அனுபவங்களை கொண்டிருப்பது அத்தியாவசியமாக உள்ளது என்ற உறுதியான நம்பிக்கையில் வேரூன்றியுள்ளதன் அடிப்படையில் தனி நபர் அபிவிருத்தியை மையமாகக் கொண்டுள்ளது.

இந்த கற்கைநெறிகளின் காலம் ஓராண்டாகும். மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவனம், அதன் தொடர்ச்சியான மதிப்பீடு, செயலமர்வுகள் மற்றும் கள கற்கை காரணமாக மாணவர்கள் அவர்களின் தொழில்சார் தன்மையினை

மேம்படுத்திக்கொள்வதற்கு அதன் சொந்த கற்பித்தல் பாணியைப் பின்பற்றுகின்றது.

தொற்று நோய் நிலைமை மற்றும் புதிய கற்கைநெறிகளின் பாடவிதானங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக, தற்காலிகமாக நிறுத்தப்பட்ட கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படாமையால், 2021 ஆம் ஆண்டில் சுற்றுலா, நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ நிறைவேற்று டிப்ளோமா மற்றும் ஆலோசனை உளவியல் உயர் டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகளின் பொருட்டு மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது.

நிறைவேற்று டிப்ளோமா கற்கைநெறிகளின் மாணவர் செயலாற்றுகை
2017 - 2021



	வருடாந்த அனுமதி					பட்டம் பெற்றோர்				
	2017	2018	2019	2020	2021	2017	2018	2019	2020	2021
மனித வளங்கள் முகாமைத்துவ நிறைவேற்று டிப்ளோமா	0	17	0	0	0	0	35	0	21	0
சேவை முகாமைத்துவ நிறைவேற்று டிப்ளோமா	0	0	0	0	0	0	115	0	0	0
சுற்றுலா, நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் மகாமத்துவ நிறைவேற்று டிப்ளோமா கற்கைநெறி	0	0	30	22	21	0	0	0	19	16
ஆலோசனை உளவியல் உயர் டிப்ளோமா	0	49	0	80	63	0	0	0	25	0

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் - 2021 ம.வ.மே.நி


3.1.4 டிப்ளோமா கற்கைநெறிகள்

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தினால் நான்கு (04) வகையான டிப்ளோமா கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றன. இது முகாமைத்துவம், மானுடவியல் மற்றும் மொழி ஆகிய பாடநெறிகளைக் கொண்டுள்ளன. இப் பாடநெறிகளை ஆரம்ப மட்ட பணியாளர்களுக்கு அவர்களின் குறித்த துறைகளில் மேம்பட்ட அறிவு, பகுப்பாய்வுச் சிந்தனை, திறன்களை கட்டியெழுப்புதல், நெறிமுறைத் தரநிலைகள் மற்றும் தலைமைத்துவம் மற்றும் பொறுப்புக்களை மேம்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு வடிவமைக்கப்படுகின்றன. இந்த டிப்ளோமாக்கள் மாணவர்களுக்கு அவர்களின் பல்வேறு தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு அனுகூலமானதாக உள்ளன. சில சமயங்களில் இது கல்விசார் கற்கையின் பல்வேறு கட்டங்கள் அல்லது மேலதிக தொழில் வாண்மைப் பயிற்சிகள் மற்றும் தகமைகளை வழங்குவதற்கும் இடையேயான இடைவெளியை நிரப்புவதற்கு மேலதிக தொழில்சார் பயிற்சி மற்றும் தகைமைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு உபகாரமாக அமைகின்றது. ஒரு டிப்ளோமா பாடநெறியானது பெறுமதியான சிறப்புத் திறன்கள், அறிவு, மற்றும் அனுபவங்களை வழங்குகின்றது.

தொழில் உளவள ஆலோசனை சேவையை வழங்குவதுடன் தொடர்புடையதால், தொழில்ரீதியான ஆலோசகர்களாக

வருவதற்கு மாணவர்கள் ஓர் உறுதியான அடித்தளத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஓர் உளவள ஆலோசகராக தனது திறமைகளை மேம்படுத்த ஒரு கற்கைநெறியை தேடுகின்ற ஒருவரின் கல்வி இலக்குகளை அடைவதற்கு உளவள ஆலோசனை உளவியலில் உயர் டிப்ளோமா கற்கைநெறி ஒருவரின் ஒரு சிறந்த நுண்ணறிவைக் கொடுக்கும். இந்த கற்கைநெறி ஒரு தொழில்முறை உளவள ஆலோசகரின் பணிகளை மையமாகக் கொண்டு ஓர் உறுதியான அடித்தளத்தை வழங்குதவற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் நடைமுறை கூறு, ஒருவரின் அடிப்படை உளவள ஆலோசனை திறன்களை வலுப்படுத்தி அவர்கள் வாடிக்கையாளருடன் ஆரோக்கியமான உறவை வளர்த்து, வாடிக்கையாளர்களின் வாழ்க்கையில் தெளிவான முன்னேற்றங்களை உண்டாக்க வழிகாட்டும். இந்த திட்டத்தை பின்பற்றுவதன் மூலம் மாணவர்கள் அடிப்படையான ஆலோசனை நுட்பங்களையும் அணுகுமுறைகளையும் கற்றுக் கொள்வார்கள்.

புதிய பாடவிதானங்களை மேம்படுத்திய பின்னர், சேவை முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிகளின் பொருட்டு 2021 ஆம் ஆண்டில் மாணவர்கள் ஆட்சேர்ப்புச் செய்வதை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் போதைப்பொருள் துஷ்பிரயோக முகாமைத்துவ டிப்ளோமாவிற்கும் மாணவர்களை பதிவு செய்வதற்கு இவ்வாண்டில் இயன்றது.



மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் - 2021 ம.வ.மே.நி


3.1.5 சான்றிதழ் கற்கைநெறிகள்

மனிதவள மேம்பாட்டு நிறுவனம், தொழில்முறை வளர்ச்சியை நோக்கி மாணவர்களை வளர்ப்பதற்காக பல்வேறு பிரிவுகளில் 10 சான்றிதழ் திட்டங்களை வழங்குகிறது. இக் கற்கைகளின் விவரங்கள் கீழே வரைபடம் மற்றும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இந்த சான்றிதழ் கற்கைகள் 3 முதல் 8 மாத காலங்களைக் கொண்டுள்ளது.

கொவிட்-19 தொற்று நோய் நிலைமை மத்தியில், மாணவர்கள் இப்போது நேரடி கற்றலில் இருந்து கணினிமூல கற்றலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் மனிதவளங்கள் பல்வேறு தொழில்நுட்ப சிக்கல்களால் கணினிமூல கற்றலுக்கு செல்ல சிரமங்களை எதிர்கொண்டது. இருப்பினும், தற்பொழுது அனைத்து கற்கைநெறிகளும் கணினிமூலமாக சீராக மேற்கொள்ளப்படுகின்றன.

2021 ஆம் கல்வியாண்டில், மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் 06 கற்கைநெறிகளை மேற்கொள்ளப்பட்டது. அதில் ஜப்பான் மற்றும் கொரிய நாட்டு சான்றிதழ் கற்கைநெறிகள் 02ம் புதிதாக உள்ளடக்கப்பட்டன.

மேலதிக மொழி கற்கைநெறியாக தமிழ் மொழி இலக்கிய கற்கைநெறி 124 இடைக்கால மாணவர்கள் பதிவாகியதுடன், கொவிட்-19 தொற்று நோய் காரணமாக தடைகள் ஏற்பட்டது. ஆயினும் தமிழ் மொழி மூலம் கற்கைநெறிகள்-16 அடிப்படை மற்றும் தமிழ் மொழி சான்றிதழ்கள் கற்கைநெறி-15 இடைக்கால இணையத்துடன் நேரடி கற்கைமூலம் நடாத்தப்பட்டது. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தில் கற்கைநெறிகளினது பூரண விகிதாசாரம் 93மூ ஆகும்.



	வருடாந்த அனுமதி					தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை				
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி	1321	2283	1938	512	0	986	1523	0	1422	122
அடிப்படை ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி	0	413	429	64	0	143	269	0	300	53
ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி	0	48	52	0	0	55	25	0	44	0
பேச்சு ஆங்கிலத்தில் சான்றிதழ் பாடநெறி	1933	580	383	0	0	1471	0	391	239	0
பாடசாலையை விட்டுச் செல்பவர்களுக்கான குறுகிய கால ஆங்கிலப் பாடநெறி	54	342	507	213	113	45	101	390	444	76
கணினி பயன்பாடுகளில் சான்றிதழ் பாடநெறி	0	412	423	0	327	336	275	347	148	178
தமிழ் மொழி சான்றிதழ் பாடநெறி - அடிப்படை	405	327	427	284	170	203	0	196	261	167
தமிழ் மொழி சான்றிதழ் பாடநெறி - இடைநிலை	145	157	110	0	122	109	104	115	96	96
ஜப்பான் மொழி சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படை மட்டம்	0	0	0	0	22	0	0	0	0	15
கொரிய நாட்டு மொழி சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படை மட்டம்	0	0	0	0	15	0	0	0	0	13

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் - 2021 ம.வ.மே.நி

**மேற்படி அட்டவணைகள் மற்றம் வரைபுகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள தரவுகள் ஏற்புடைய ஆண்டில் தகைமைகளை பூர்த்தி செய்த அல்லது பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கை காண்பிக்கப்படுகிறது. அது குறித்த ஆண்டில் வருடாந்த ஆட்சேர்ப்பில் உள்ளடக்கப்படமாட்டாது.

3.2. 2021 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்

மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தில், பட்டப்பின், இளமாணி மற்றும் டிப்ளோமா பாடநெறிகளைப் பயிலும் மாணவர்கள் ஏற்புடைய கற்கை பாடநெறிகளின் கட்டாய அங்கமாக பயிற்சி செயலமர்வொன்றில் பங்கேற்க

வேண்டியிருக்கின்றது. இந்த பாடநெறிகளின் நோக்கம் மாணவர்களின் தொழில்சார் மேம்பாடாகும். விரிவுரைகள் போலல்லாது செயலமர்வுகள் தொழில்சார் உலகத்திற்குத் தொடர்பான கலந்துரையாடல்களுக்கு ஒரு களத்தினைத் திறப்பதற்கும் - கலந்துரையாடல்களை ஊக்குவிக்கின்றன. பங்கேற்பவர்கள் ஒரு பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பில் அவர்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்ள முடியும். புதிய திறன்களை மேம்படுத்திக்கொள்வதற்கு செயலமர்வுகள் உதவியாக இருப்பதுடன், அது மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் உதவும். மாணவர்கள் அவர்களுடைய முன்வைப்பு திறன்கள், தலைமைத்துவம், தொடர்பாடல் மற்றும் குழுப் பணித் திறன்கள் முதலியனவற்றினை மேம்படுத்திக்கொள்ள முடியுமாக இருக்கும். இந்தத் திட்டங்களின் நோக்கம், தொடர்பாடலில் ஆரம்பித்து பல்வேறு சூழல்களில் சேவையாற்றுதல், உணர்வுபூர்வமாக சிந்திக்கும் திறனை மேம்படுத்தல், படைப்பாற்றல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானம் எடுத்தல், பணியாற்றுவது எப்படி என்பது சம்பந்தமாக அறிந்துகொள்ளல் மற்றும் பொது மக்களுடனான கலந்துரையாடல்களை மேம்படுத்தல், மன அழுத்தம் மற்றும் மோதல்களை தவிர்த்தல் போன்ற விரிவான வீச்சில் பரந்திருக்கும் மென்திறன்களை விருத்தி செய்வதாகும்.

2021 ஆம் ஆண்டில் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் மாணவர்கள் மற்றும் அரசு/தனியார் துறையில் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவு, திறன்கள், மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நோக்கில் பட்டப்பின், இளமாணிப் பட்ட, மற்றும் டிப்புளோமா பாடநெறிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கும், நிறுவனத்தின் வளப்பகிர்வாளர்களது வழிநடாத்தலில் பயிற்சி செயலமர்வுகள், மக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்று சர்வதேச செயலமர்வுகளும் அடங்கலாக 16 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

வகை	செயலமர்வு	பங்குபற்றிய எண்ணிக்கை	இலக்கு குழு
செயலமர்வு	கருத்திட்ட அறிக்கைகளின் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்	58	மனிதவள முகாமைத்துவ முதுகலைமாணி கற்கைநெறி - இலக்கம் 10 (2019)
	கருத்திட்ட அறிக்கைகளின் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்	93	மனிதவள முகாமைத்துவ முதுகலைமாணி கற்கைநெறி - இலக்கம் 08 (2019)
	முகாமைத்துவ கோட்பாடுகள் மற்றும் பயன்பாடுகளை சமர்ப்பித்தல்	66	வியாபார முகாமைத்துவ முதுகலைமாணி கற்கைநெறி - இலக்கம் 09 (2020)
	முகாமைத்துவ கோட்பாடுகள் மற்றும் பயன்பாடுகளை சமர்ப்பித்தல்	56	மனிதவள முகாமைத்துவ முதுகலைமாணி கற்கைநெறி - இலக்கம் 11 (2020)
	கருத்திட்ட அறிக்கைகளின் முன்னேற்றம் சமர்ப்பித்தல்	58	மனிதவள முகாமைத்துவ முதுகலைமாணி கற்கைநெறி - இலக்கம் 10 (2019)
	கருத்திட்ட அறிக்கைகளின் முன்னேற்றம் சமர்ப்பித்தல்	93	மனிதவள முகாமைத்துவ முதுகலைமாணி கற்கைநெறி - இலக்கம் 09 (2020)
கள கற்கை	போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு சிகிச்சையளித்தல்	29	போதைப்பொருள் துஷ்பிரயோகம் தொடர்பான முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி
கண்காட்சிகள்/ பொதுமக்கள் செயலாற்றுகைகளை ஒழுங்கமைத்தல்	சமச்சீர் நிலை வாழ்வியலுக்கான உளவியல்	175	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் கற்கும் மாணவர்கள்
	ஆநசளநலளனைந வியாபார புதிய நிகழ்ச்சித்திட்டம்	அமர்வில் 15-20	ஐக்கிய இராச்சியத்தின் லிவர்புல் பாடசாலை மாணவர்கள்
வானொலி, ரூபவாகினி நிகழ்ச்சித்திட்டங்கள்	டொலர் - ரூபாவிற்கு மற்றும் வயிறு - புதிய பாராளுமன்றம் (னுநசநயெவுஏ)	-	பொது மக்கள்
	பொருளாதார நெருக்கடி மற்றும் முகாமைத்துவ திட்டங்கள் டீஜபு குழுஊருளு (னுநசநயெ வுஏ)	-	பொது மக்கள்

	சுபாரத்தி வானொலி நிகழ்ச்சித்திட்டம்	-	பொது மக்கள்
	ஊடீளுடு நிகழ்ச்சித்திட்டம்	-	பொது மக்கள்
	சுதேச சேவை நிகழ்ச்சித்திட்டம் - மனிதவள முகாமைத்துவம் எவ்வாறு செவ்வையாக செயற்படுத்துவது (புழுழன ஆழசனைபெ ளுசனை டுயமெயஇ ளுலையவாய வுஏ)	-	பொது மக்கள்
	சமமற்ற உலகத்தில் உள சுகாதார ஆரோக்கியம் (னுநசநயெ வுஏ)	-	பொது மக்கள்
ஏனைய ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்	ஊடக நிகழ்ச்சித்திட்டம் ீயுஏளு ஊழஎெழஉயவழைஎ 2020	20 - 30	லத்தின் அமெரிக்க வலயத்தின் கல்விமான்கள்

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் - 2021 ம.வ.மே.நி

3.3 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்

ஆராய்ச்சியாளரின் பெயர்	தலைப்பு	வெளியிடப்பட்ட திகதி	இடம்- வெளியீடு
சிரேட்ட பேராசிரியர் திரு. எச்.டீ.கருணாரத்ன	Migration as an Economic structure	2021	இலங்கை பொருளாதார ஜர்னல்
திருமதி.கே.பீ.மாதொட்டஆரச்சி (சம எழுத்தாளர்) திரு.கே.ஏ.ஏ.என். திலகரத்ன	Philosophy of Approaches in Social Science: A Review of Positivism, Phenomenology and Critical Social Sciences Qualitative Research 2021	2021	Technium சமூக விஞ்ஞான ஜர்னல்
திருமதி.கே.பீ.மாதொட்டஆரச்சி (சம எழுத்தாளர்) திரு.கே.ஏ.ஏ.என். திலகரத்ன	The Social Structure of the City: A Critical Reviewof Contributing Sociologists	2021	தற்கால நகர் கல்வி
திருமதி.கே.பீ.மாதொட்டஆரச்சி (சம எழுத்தாளர்) திரு.கே.ஏ.ஏ.என். திலகரத்ன திருமதி டப்.எம்.சீ.பீ.கொடகே	From Conflict to Coexistence: A Critical Look at issues Related to Human-Wildlife Interactions in Sri Lanka	2021	சட்டம் மற்றும் நிருவாகம் தொடர்பான ஆசிய ஜர்னல்
திருமதி.கே.பீ.மாதொட்டஆரச்சி (சம எழுத்தாளர்) திரு.கே.ஏ.ஏ.என். திலகரத்ன	Perspective from natural law and sociological school of Law	2021	சட்டக் கொள்கை மற்றும் சமூக மீளாய்வு
திருமதி.கே.பீ.மாதொட்டஆரச்சி (சம எழுத்தாளர் - எச்.சுகததாஸ, பி.சந்திரசிறி, கே.தில்ருக்ஷி, ரீ.ரீ. ஜயமஹ, டப்.ஏ.லோவே, ரீ.பீரிஸ், பீ.புஷ்பகுமார)	Impact of CRM Strategies towards customer loyalty; with special reference to the customers of privet hospitals in Colombo	2021	IJRDO – வியாபார நிருவாக ஜர்னல்
திருமதி.கே.பீ.மாதொட்டஆரச்சி (சம எழுத்தாளர்) திரு.கே.ஏ.ஏ.என். திலகரத்ன திருமதி டப்.எம்.சீ.பீ.கொடகே	The need for data protection in a Sri Lankan context: A Critical Review with special Reference to the Pandemic Period	2021	இரண்டாவது சர்வதேச மாநாடு 2021 IC2- மனிதவளங்கள் மேம்பாட்டு நிறுவனம்

ஏ.சீ.ஏபா (சம எழுத்தாளர் - திருமதி. கே.பீ.மாதொட்டஆரச்சி)	Impact of service Flower on Customer satisfaction in Western Province Hotel Service – Sri Lanka 2021	2021	பொருளாதார விஞ்ஞானம், வியாபார சுற்றுலா, சமூகவியல் சர்வதேச மாநாடு (ICEBTS – 2021) மலேசியா (online)
திருமதி.கெ.பீ.மாதொட்டஆரச்சி	The Study on the Impact of Cooperate Social Responsibility (CSR) on Customer Loyalty and Customer Satisfaction; with Related to the supermarket industry in Sri Lanka 2021	2021	பொருளாதார விஞ்ஞானம், வியாபார சுற்றுலா, சமூகவியல் சர்வதேச மாநாடு (ICEBTS – 2021) இந்தோனிஷியா (online)
கலாநிதி டப்.எஸ்.சந்திரசேகர (சம எழுத்தாளர் - டப்.டீ.சந்திரசேன, ரீ.டி.சிங்காரச்சி, எஸ்.ரூபசிங்க)	Relations of G.C.E (O/L) Student's Biology Self-Concept and Motivation with their Achievement and Misconceptions 2021	2021	பொருளியல், வணிக மற்றும் முகாமைத்துவ சர்வதெச ஜர்னல்
கலாநிதி டப்.எஸ்.சந்திரசேகர,	The Impact of perceived of COVID-19 on Future Anxiety and Psychological Wellbeing in Sri Lanka: A cross-sectional study.	2021	ரஜரட்ட சமூகவியல் ஜர்னல்
செல்வி.சீ.எல்.எதிரிசிங்க (சம எழுத்தாளர்- பேராசிரியர் திருமதி.பீ. கைலாசபதி)	Why Do Only Some People Blow the Whistle? A Multi-Theoretical perspective	2021	முகாமைத்துவம் இலங்கை ஜர்னல்
செல்வி.சீ.எல்.எதிரிசிங்க (சம எழுத்தாளர் திரு.கே.ஏ.ஏ.என். திலகரத்ன)	Bullied after Blowing the Whistle: An Integrative Literature Review	2021	பிஜிங் சட்ட மீளாய்வு
செல்வி.சீ.எல்.எதிரிசிங்க (சம எழுத்தாளர் திருமதி. பேராசிரியர் பீ.கைலாசபதி)	To Tell or Not to tell: Individual factors Related to Whistle-blowing intention (under review) 2021	2021	மனித வளங்கள் ஆசிய பசுபிக் ஜர்னல்
திரு.எம்.டப்.என்.டீ.வீரக்கொடி (சமஎழுத்தாளர் - செல்வி சீ.எல். எதிரிசிங்க)	Developing an informated workplace: Information communication technology adoption and human resource management (Under review) 2021	2021	மனித வள மேம்பாட்டு நிருவன ஜர்னல்
பேராசிரியர் எஸ்.லீ. (சமஎழுத்தளார் - திரு.கே.ஏ.ஏ.என்.திலகரத்ன)	Encyclopedia of Public International Law in Asia (3 Vols)	2021	Brill வெளியீடு
திரு.கே.ஏ.ஏ.என்.திலகரத்ன	The Role of the Judiciary in Recognizing and Implementing International law: A Comparative Analysis with Special Reference to Sri Lanka	2021	லிபட் மற்றும் சர்வதேச நடவடிக்கைகளின் ஜர்னல்

திரு.கே.ஏ.ஏ.என்.திலகரத்ன (சமஎழுத்தளார் - என்.ஜயரத்ன)	Theories Involed in Recognizing and Implementing International Law in Domestic Contexts 2021	2021	சட்ட கொள்கைகள் மற்றும் உலகளாவிய ஜர்னல்
திரு.கே.ஏ.ஏ.என்.திலகரத்ன	A Utopia or Reality: Possibility of Using the Properlaw of Contract throughout an International Commercial Arbitration Claim. 2021	2021	பீஜிங் சட்ட மீளாய்வு
திரு.கே.ஏ.ஏ.என்.திலகரத்ன (சமழுத்தாளர் ஜீ.பீ.டீ மதுஷான்)	Revolutionary Forces and the Grundnorm: A Critical Review of the Leagality and the recognition of New Constitutional orders	2021	சமூக கொள்கைகள் மற்றும் சட்டம் சர்வதேச ஜர்னல்
திரு.கே.ஏ.ஏ.என்.திலகரத்ன (சமழுத்தாளர் எச்.எஸ்.டி.மென்டிஸ்- என்.ஜயரத்ன)	The success and failure in the implementation of Convention on Biological Diversity in Sri Lanka	2021	சமூகவியல் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க ஜர்னல்
திரு.எஸ்..பிரனாந்து- சமஎழுத்தாளர் - திரு.கே.ஏ.ஏ.என்.திலகரத்ன	On the Myth and magic of Apparitions: A study based on Mother Mary's Church in SriLanka	2021	
திரு.கே.ஏ.ஏ.என்.திலகரத்ன (சமழுத்தாளர் எச்.எஸ்.டி.மென்டிஸ்-)	Scales of Natural Justice in a Military summary Trial: A Critical Analysis with special Reference to SriLanka	2021	14 ஆவது KDU சர்வதேச ஆராய்ச்சி மாநாடு
திரு.எச்.எஸ்.டி.மென்டிஸ்- (சமஎழுத்தாளர் - திரு.கே.ஏ.ஏ.என். திலகரத்ன, எம்.டீ.ஏ.அய். குணதிலக்க, திரு.ஏ.பீ.ஆர்.எம்.விஜயவர்தன)	Unfairness, Legitimate Expectation and proportionality as Foundations of Judical Review: A Comparative Analysis of Sri Lanka and United Kingdom 2021	2021	KDU சட்ட ஜர்னல்
